பாடம் 20

இறைத்தந்தை எம்மோடிருக்கிறார்

நல்ல புத்தகம் பத்திரிகை வாசிப்போம்
அதன் மூலம் அறிவைப் பெறுவோம்
எதிர்காலத்தில் நாட்டைக் காப்போம்
இறைத் தந்தையை மகிமைப்படுத்துவோம்

பெற்ற அறிவைப் பகிர்ந்து கொள்வோம்
மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுப்போம்
எதிர்காலத்தை வளம் பெறச் செய்வோம்
இறை வரம் வேண்டி நிற்போம்



ஓடி ஆடி விளையாடுவோம்
பந்தும் மட்டையும் கொண்டு செல்வோம்
நண்பர்களுடன சேர்ந்து விளையாடுவோம்
எப்போதும் நாம் மகிழ்ச்சியாமிருப்போம்

எங்களுடன் சேர்ந்து விளையாட
நண்பர்களே விரைந்து வாருங்கள்
வெற்றி தோல்வியைப் பகிர்ந்து கொள்ள
நல்ல மனதை எங்களுக்குத் தாருங்கள்

பாட்டுப் பாடி ஆடி மகிழ்விப்பதும்
இனிய கீதம் என்றும் இசைப்பதும்
கேட்போர் உள்ளம் கனியச் செய்வதும்
சிறியோர் எமது வேலை அன்றோ

கஷ்டப்பட்டு வேலை செய்ய
வீட்டுத் தோட்டத்தை அழகுபடுத்த
முற்றத்தில் பூஞ் செடிகளை நட்டிட
வரமருளும் எம் இறைவா எந்நாளும்

மேள தாளம் இசைத்திடுவோம்
இறை அன்பைப் போற்றிடுவோம்
சிறியோர் நாம் கூடிடுவோம்
இறைவனைப் பாடிப்புகழ்ந்திடுவோம்

சலங்கை ஒலியும் எழுப்பிடுவோம்
இசைக் கருவியும் மீட்டிடுவோம்
திறமைகளைப் பகிர்ந்து கொள்வோம்
இறை அருளைப் பெற்று மகிழ்வோம்

வண்ண வண்ணக் கடதாசி ஒட்டி
பட்டம் ஒன்று ஒழுங்கு செய்வோம்
கடதாசியால் கப்பல் செய்வோம்
தண்ணீரில் மிதக்க விடுவோம்

உடலை வளர்க்க விளையாடுவோம்
ஓலை மாலை செய்து பார்ப்போம்
வகுப்பு மாணவர் திறமை காண்போம்
என்றுமே இறை அன்பை நாடுவோம்

ஒப்படை :

1. இப்பாடலின் படி இறைத்தந்தை உங்களுக்குத் தந்துள்ளவைகளைப் பட்டியற்படுத்துங்கள்.
2. இதிலே தரப்பட்டுள்ள திறமைகளை மாணவர்களோடு சேர்ந்து நடித்துக் காட்டுங்கள்.
3. உங்களிடமுள்ள திறமைகளை ஒரு அட்டையில் எழுதுங்கள்.
4. உங்களிடமுள்ள நற்பண்புகள் நான்கு எழுதுங்கள்.